# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.333/2023</u>

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:**

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இறந்துபோன ராமச்சந்திரனும், நானும் ஒரே ஊரைச்சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர்கள் என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். இருர் கிராமம் திருச்சியிலிருந்து சென்னை செல்லும் தேசியநெடுஞ்சாலையில் மேற்குபக்கம் உள்ளது என்றால் சரிதான். தீவணகடை தேசியநெடுஞ்சாலையில் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தின் அருகில் தான் காரை பிரிவு ரோடு உள்ளது என்றால் சரிதான். விபத்து சாலையின் நடுப்பகுதியில் நடந்தது என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் சுமார் 50, 100 அடிதூரத்தில் மோட்டார்சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன். நான் விபத்து நடந்த அன்றே பாடலூர் காவல் நிலையம்

சென்றேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் கலர் எனக்கு ஞாபகமில்லை. அது சபாரி வாகனம் ஆகும். இறந்துபோனவருக்கு தலையில் மற்றும் காலில் அடிப்பட்டது. பின்னால் வரும் வாகனத்தை பார்த்து அவர் ரோட்டிற்கு குறுக்கே கடந்திருந்தால் விபத்தை தவிர்திருக்கலாம் என்றால் சரியல்ல. அவர் நின்று கொண்டிருந்தார். அவர் அன்று ஹெல்மட் போடவில்லை என்றால் சரிதான். நான் சரியாக கவனிக்கவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.